## 28.31 உயர் மட்டக்குழுவின் பரிந்துரைகள் –‘சிறுபாசனம்’ ‘நீர்மேலாண்மை’ மற்றும் ‘நீர்பிடிப்பு மேம்பாடு’ பற்றிய பரிந்துரைகள் மீதான அரசின் முடிவுகள்

பொதுப்பணி (டபிள்யூ–2) த்துறை

அரசாணை (நிலை) எண். 331 நாள் : 18.06.1999

படிக்க :

1. அரசாணை (நிலை) எண். 320, ஊரக வளர்ச்சித் துறை நாள் 11.1.97.
2. அரசு ஆணை (நிலை) எண். 100 ஊரக வளர்ச்சித் துறை நாள் 22.5.98.
3. ஊரக வளர்ச்சித் துறை செயலாளரின் நேர்முக கடிதம் எண். 14532/சி4/99, நாள் 11.5.99.

**ஆணை**

மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு கூடுதல் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் வழங்க வழிவகைகளை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய உயர்மட்டக்குழு ஒன்று அமைத்து பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை 11.1.99 அன்று அரசுக்கு சமர்ப்பித்தது.

2) நீரினை மேம்பட்ட அளவில் பயன்படுத்தும் பொருட்டு ஊராட்சி அமைப்புகள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து உயர்மட்டக்குழு அறிக்கை இயல்–3 ‘‘சிறுபாசனம், நீர் மேலாண்மை மற்றும் நீர்பிடிப்பு மேம்பாடு’’ என்ற தலைப்பின் கீழ் தனது பரிந்துரையை அளித்துள்ளது. உயர்மட்டக்குழுவின் பரிந்துரைகள் அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனைக்குப் பின், இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள், உரிமைகள் மற்றும் பொறுப்புகளை ஒப்படைப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3) இவ்வாணை ஊரக வளர்ச்சித் துறையின் ஒப்புதலுடன் அத்துறையின் அ.சா.எண். 23622/சி4/99–1 நாள் 16.6.99–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ந.பி.குப்தா**
அரசு செயலாளர்

## இணைப்பு

## சிறுபாசனம், நீர் மேலாண்மை மற்றும் நீர்பிடிப்பு மேம்பாடு (அ) சிறுபாசனம்

### கிராம ஊராட்சிகள்

1) கிராம ஊராட்சிப் பகுதிகளில் 100 ஏக்கருக்கும் குறைவான பாசனப் பரப்புள்ள ஏரிகளை கண்டறிந்து அவற்றின் நீர் பரப்பு, நீர்வளம் எவ்வளவு காலத்திற்கு கிடைக்கும் போன்ற விவரங்களைக் சேகரித்து, தேவையான திட்டங்களை தீட்டி செயல்படுத்துதல் மற்றும் தேவையான விவரங்களை ஊராட்சி ஒன்றியங்களுக்கு அளித்து ஊராட்சி ஒன்றிய அளவில் திட்டங்கள் தீட்ட உதவுதல்.

2) பயிர் வளர்ப்புக்கு தேவையான நீர் ஆதாரங்களான பாசனக் குளங்களில் மண்படிந்து அதன் கொள்ளளவு குறைந்து கொண்டே வருவதைத் தவிர்க்க வறட்சிக் காலங்களில் 100 ஏக்கருக்கு குறைவான பாசனப் பரப்புள்ள குளங்களில் தூர் எடுக்கும் நடவடிக்கைகள் கிராம ஊராட்சிகள் மேற்கொள்ளுதல்.

3) தேசிய வேளாண்மை வங்கி (நபார்டு) சிறுபாசன மேம்பாட்டிற்கான திட்டங்களை நிறைவேற்றுகிறது. இத்திட்டத்தினைப் பயன்படுத்தி ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கவும், 100 ஏக்கருக்கும் குறைவான பாசனப் பரப்புள்ள குளங்களில் பாசனக் கால்வாய்களை சீர் செய்வதிலும் கிராம ஊராட்சிகள் உதவுதல்.

4) மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பயன்பெறத் தகுதியுள்ள விவசாயிகளில் தகுதியுள்ள பயனாளிகளை கண்டிறிய உதவுதல்.

### ஊராட்சி ஒன்றியங்கள்

1) ஊராட்சி ஒன்றியங்கள் பல கிராம ஊராட்சிகளை கொண்டது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பல சிறுபாசனத் திட்டங்கள் அந்த பகுதி விவசாயிகளின் மேம்பாட்டிற்கு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இவற்றில் 100 ஏக்கருக்கு குறைவான பாசனப் பரப்புள்ள ஏரிகளின் நீர்ப்பாசன விநியோக முறைகள், நீர் வரத்துக் கால்வாய் சீரமைப்பு, நுண் பாசன முறைகள் மற்றும் நுண் நீர்பாசன முறைகள் மற்றும் சொட்டு நீர்ப்பாசனம் ஆகிய திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளை வகைப்படுத்தி, சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு பரிந்துரைத்து பழுதடைந்தவற்றைச் சீராக்கவும், புதிய பணிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கைகள் எடுத்தல்.

2) சிறுபாசனம் குறித்த புள்ளி விவரங்களை ஊராட்சி ஒன்றிய அளவில் தொகுத்து அதனைப் பராமரிக்க வேண்டும். இதன் பொருட்டு நீர்வள/நிலவியல் தொழில்நுட்ப வல்லுனர்களின் தொழில்நுட்ப ஆலோசனையைப் பெற்று மாவட்ட ஊராட்சிகளுக்கு தெரிவித்தல்.

3) ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் உள்ள 100 ஏக்கருக்கு குறைவான பாசனப் பரப்புள்ள ஊராட்சிக் குளங்களை கிராம ஊராட்சிகளின் உதவியுடன் கண்டறிந்து அதன் விவரங்களைப் பெற்று மழையில்லா காலங்களில், குளங்களில் தூர் எடுத்து, குளத்தின் நீர் கொள்ளளவினை அதிகரிக்க, ஊராட்சி ஒன்றிய அளவில் நடவடிக்கைகள் எடுத்தல் மற்றும் ஒன்றுக்கு மேற்பட்ட கிராம ஊராட்சிகள் தொடர்புடைய, பாசனக் குளங்களுக்கு நீர் பகிர்மான முறையை சீராக்குதல், பிரச்சினைகளைத் தீர்த்தல்.

4) பல்வேறு அரசு துறைகள் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் மூலம் அமைக்கப்படும் நீர்ப்பாசன ஆழ்குழாய்க் கிணறுகள் திட்டம், வரத்துக் கால்வாய் சீரமைப்பு ஆகிய பணிகளை செயல்படுத்தவும், பயனாளிகளைக் கண்டறியவும் கிராம ஊராட்சிகளை ஒருங்கிணைந்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உதவுதல்.

5) மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெறும் பணிகள் குறித்து சம்பந்தப்பட்ட துறைகளுக்கு ஆலோசனை வழங்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிகாரம் வழங்குவது.

### மாவட்ட ஊராட்சிகள்

1) மாவட்ட அளவில் நீர்ப்பாசன வளத்தை மேம்படுத்த மாவட்டம் முழுவதிலும் உள்ள நீர்ப்பாசன குழாய்கள், ஏரிகள், வரத்துக் கால்வாய்கள் போன்றவற்றின் துல்லியமான புள்ளி விவரங்களை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பெற்று மாவட்ட அளவில் தொகுத்து, திட்டமிடுவதற்கு ஏதுவாக பராமரித்தல்.

2) நீர்ப்பாசன வளத்தை மேம்படுத்தும் பொருட்டு ஓர் தொலைநோக்குத் திட்டத்தை தயாரித்து சம்பந்தப்பட்ட துறைகள் மற்றும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியங்கள், கிராம ஊராட்சிகளுடன் பகிர்ந்து கொள்ளுதல்.

3) கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படுத்தும் 100 ஏக்கருக்கு குறைவான பாசனப் பரப்புள்ள ஏரிகளை தூர் வாரும் பணிகள், வரத்துக் கால்வாய் மராமத்துப் பணிகள் ஆகிய பணிகளுக்கு மாவட்ட ஊராட்சிகள் உறுதுணையாக இருத்தல் மற்றும் ஆலோசனைகள் வழங்குதல்.

4) 100 ஏக்கருக்கு குறைவான பாசனப் பரப்புள்ள கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய பாசன குளங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக எடுக்கப்படும் அனைத்து திட்ட பணிகளை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல்.

### (ஆ) நீர் மேலாண்மை

#### கிராம ஊராட்சிகள்

1) சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சிகளில் நிலத்தடி நீரின் அளவு மற்றும் இருப்பு குறித்த விவரங்களை நிலவியல் தொழில் நுட்ப வல்லுநர்களின் மூலம் கண்டறிந்து அந்த விவரங்களை பயன்படுத்துதல்.

2) விவசாய நிலங்களில் நீர்ப்பாசனத்தை மேம்படுத்தும் பொருட்டு ஆழ்குழாய் கிணறு அமைக்கும் சாத்தியக்கூறுகள் குறித்து, கிராம ஊராட்சிகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளுதல்.

3) திறந்த வெளி கிணறுகளுக்கு உரிய அளவு இடைவெளி இருக்க வேண்டும் என்ற நிலையில் தொழில் நுட்ப வல்லுனர்களின் கருத்துக்களை பொது மக்களிடையே பரப்புதல்.

#### ஊராட்சி ஒன்றியங்கள்

1) ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள நிலத்தடி நீரின் அளவு மற்றும் இருப்பு குறித்த விவரங்களை நிலவியல் தொழில் நுட்ப வல்லுனர்களின் மூலம் கண்டறிந்து, அந்த விவரங்களை ஊராட்சி ஒன்றிய அளவில் பயன்படுத்தி நடவடிக்கைகள் எடுத்தல்.

2) விவசாய நிலங்களில் நீர்ப்பாசனத்தை மேம்படுத்தும் பொருட்டு ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் சாத்தியக் கூறுகள் குறித்து, ஊராட்சி ஒன்றியங்கள் நடவடிக்கைகள் எடுத்தல்.

3) நீர் மேலாண்மை குறித்த திட்டங்களை ஊராட்சி ஒன்றிய அளவில் திட்டமிட்டு செயல்படுத்த சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்வது பல்வேறு திட்டப் பணிகளை ஒருங்கிணைத்தல்.

#### மாவட்ட ஊராட்சிகள்

மாவட்ட அளவில் நிலத்தடி நீரின் அளவு, நீரின் தன்மை ஆகியவற்றின் விவரங்களை தொகுத்து அந்த விவரங்களை நிலவியல் வல்லுநர்களின் அறிவுரைகளின்படி பயன்படுத்தி மாவட்ட திட்டம் தயாரித்து, நீரினை முறையாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுத்தல்.

### (இ) நீர்பிடிப்பு மேம்பாடு

#### கிராம ஊராட்சிகள்

1) நில ஆவணங்களை மேம்படுத்தலும், பராமரித்தல் சார்ந்த திட்டங்களில் வேளாண் மற்றும் மேய்ச்சல் நிலம், தரிசு நிலம், நீர்த்தேக்கங்கள், நீர் நிலைகள், சாலைகள், கரைகள் போன்றவை ஏனைய சமுதாய நிலங்கள் தொடர்பான விவரங்களின் மேம்பாட்டிற்கு கிராம ஊராட்சிகள் உதவுதல் மற்றும் ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அதனை அகற்ற உதவுதல்.

2) நீர்பிரி முகடு மேலாண்மை சார்ந்த பொருட்களில், திட்டத்தின் அனைத்து நில நீர் பயன்பாடுகள் குறித்து ஊராட்சிகள் மூலம் நடவடிக்கைகள் எடுத்தல், உற்பத்தியினை அதிகரிக்க சமுதாய பொதுநிலம் மற்றும் பொதுச் சொத்துக்களை முறையாக பயன் பயன்படுத்துவதை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல், இது தொடர்பான சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உதவுதல், இயற்கை வள ஆதாரங்கள், சுற்றுச் சூழலை மேம்படுத்தும் வகையில் பல துறைகளில்

ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் எடுத்தல், நீரிபிரி முகடு மேலாண்மை சார்ந்த பொருட்களில் திட்டத்தின் அனைத்து நில/நீர் பயன்பாடுகள் குறித்து ஊராட்சிகள் மூலம் நடவடிக்கைகள் எடுத்தல், உற்பத்தியினை அதிகரிக்க சமுதாய பொதுநிலம் மற்றும் பொதுச் சொத்துக்களை முறையாக பயன்படுவதை மேற்பார்வையிட்டு ஆய்வு செய்தல், இது தொடர்பாக சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உதவுதல், இயற்கை வள ஆதாரங்கள், சுற்றுச் சூழலை மேம்படுத்தும் வகையில், பல துறைகளின் மூலம் ஒருங்கிணைப்பு நடவடிக்கை எடுத்தல்.

3) கிராம ஊராட்சிகள், தங்கள் பகுதியின் நீர்பிடிப்பு மேம்பாடு சார்ந்த திட்டங்களை செயல்படுத்தத் தேவையான செயல் திட்டங்களைத் தீட்டுதல் கிராமப் புறங்களின் நில அமைப்புக்கு ஏற்ற மரம் மற்றும் பயிர்களைக் கண்டறிதல்.

4) ஒருங்கிணைந்த நீர்பிரி முகடு மேம்பாட்டுத் திட்டத்திற்கான பயனாளிகளைக் கண்டறிய சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உதவுதல்.

### ஊராட்சி ஒன்றியங்கள்

1) ஊராட்சி ஒன்றியங்கள் நீர்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த தேவையான செயல் திட்டங்களைத் தீட்டுவதற்கும், பல்வேறு துறையின் சேவைகளை ஒருங்கிணைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

2) நீர்பிடிப்பு மேலாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்த, பொது மக்களைக் கொண்ட (அ) நீர் பயன்படுத்துவோர் குழுக்கள் (ஆ) நாற்றங்கால் அமைப்போர் குழுக்கள் போன்ற குழுக்கள் அமைப்பதில், சம்பந்தப்பட்ட துறை அலுவவர்களுக்கு உதவுதல்.

3) நிலம் மற்றும் நீரை முறையாகப் பயன்படுத்த ஊராட்சி ஒன்றிய அளவிலான செயல் திட்டங்களைத் தயாரிப்பதில் உதவுதல், பொது மக்கள் மற்றும் அமைக்கப்படும் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் விவசாயிகளுக்குத் தேவையான மண்வளம், நீர்பிடிப்பு மேலாண்மை சார்ந்த பயிற்சிக்கு ஏற்பாடுகள் செய்தல்.

4) ஒருங்கிணைந்த நீர்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்காக உதவுதல் மற்றும் திட்ட செயல்பாட்டை ஆய்வு செய்தல்.

5) மண்வள அட்டைகள் பராமரிப்புத் திட்டத்தின் கீழ் சம்மந்தப்பட்ட விவசாயிகளுக்கும் துறை அலுவலர்களுக்கும் உதவுதல்.

### மாவட்ட ஊராட்சிகள்

நீர்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டத்திற்கான மண்வளம், நீர்பிடிப்பு பரப்பு ஆகிய விவரங்களைப் பெற்று பராமரித்தல், பெறப்பட்ட விவரங்களைக் கொண்டு தொலைநோக்குத் திட்டங்களைத் தயாரித்தல், மாவட்ட ஊராட்சியின் நீர்பிடிப்பு மேம்பாடு சார்ந்த திட்டங்களின் அனுபவங்களையும் இதர விவரங்களையும் ஊராட்சி ஒன்றியத்திற்கும், கிராம ஊராட்சிகளுக்கும் அளித்தல்.

**ந.பி.குப்தா**
அரசு செயலாளர்